# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0603/ஊராட்சி/2018

ஆணை எண்: 130/2018

நாள்: 25/05/2018

வெ. ஷியாம்குமார்,
எண்.1, மன்மதன் கோவில் தெரு,
பெரிய கடை வீதி,
திருமங்கலம் – 625 706. – **மனுதாரர்**

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம்,
ஊராட்சி செயலாளர்,
ஒடைப்பட்டி ஊராட்சி. – **எதிர் மனுதாரர்கள்**

## <u>ஆணை</u>

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் வசிக்கும் திரு. வெ. ஷியாம் குமார் அவர்களின் 8.5.2018 நாளிட்ட புகார் மனுவில், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், ஒடைப்பட்டி கிராம ஊராட்சியில், ஊராட்சி செயலாளர் திரு. சந்திரசேகர் அவர்களை T. அரசபட்டி ஊராட்சியிலிருந்து ஒடைப்பட்டி ஊராட்சிக்கு 27.4.2017ம் தேதி பணி மாறுதல் வழங்கி (வட்டார வளர்ச்சி அலுவலர்) உத்திரவிடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 17.4.17 முதல் 8.9.17 தேதி வரை யாரேனும் பணி மாறுதல் வழங்கப்பட்டதா என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியதற்கு, இந்த காலகட்டத்தில் ஊராட்சி செயலர்கள் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மொத்தமுள்ள 36 ஊராட்சிகளில் யாரையும் பணி மாறுதல் செய்யவில்லை என்று வட்டார வளர்ச்சி

அலுவலர் தவறான தகவல் அளித்து அரசு விதிகளை மீறியுள்ளார்கள் என்றும் மேலும் திரு. சந்திரசேகர் என்பவர் கடந்த 2014–ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒடைப்பட்டி ஊராட்சியில் (பொறுப்பு) செயலாளராக பணிபுரிந்த போது தனி அலுவலர் முத்திரையை தானாக அச்சடித்து பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதற்காக இவரை மாவட்ட ஆட்சித் தலைவரால் பணியிட மாற்றம் செய்யப்பட்டது என்றும் இம்மாறுதலை மறைத்து தற்போது பணியிட மாற்றம் பெற்றுள்ளார் எனத் தெரிவித்தும் அவரது புகார் மனுவினை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்து அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறார்.

2018-ஆம் ஆண்டு மே திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.** 30/5/18

<u>பெறுநர்</u>

வெ. ஷியாம்குமார்,
எண்.1, மன்மதன் கோவில் தெரு,
பெரிய கடை வீதி,
திருமங்கலம் – 625 706.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   மதுரை மாவட்டம், மதுரை (இணைப்புகளுடன்)
2. நேர்முக எழுத்தர் (மு.ம.ந.)
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)